
தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## துறைமுகங்களில் 1-ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்



**நாகப்பட்டினம்,**

அந்தமான் தீவுக்கு அருகே வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்தத் தாழ்வுநிலை காரணமாக, நாகை, காரைக்கால், புதுச்சேர், தூத்துக்குடி துறைமுகங்களில் 1-ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு புதன்கிழமை மாலை ஏற்றப்பட்டது.

அந்தமான் நிக்கோபர் தீவின் தலைநகரான போர்ட்பிளேரிலிருந்து சுமார் 490 கி.மீ தொலைவில் வடக்கு, வடமேற்கு திசையில், வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை ஏற்பட்டிருப்பது புதன்கிழமை கண்டறியப்பட்டது.

இதைத் தொடர்ந்து, புயல் உருவாகக் கூடிய திடீர் காற்றுடன் மழை பெய்யும் வானிலை ஏற்பட்டுள்ளது என்பதை அறிவிக்கும் தூர முன்னறிவிப்பாக துறைமுகங்களில் 1-ஆம் எண் புயல் எச்சரிக்கைக் கூண்டு ஏற்றப்பட்டது.

## அந்தமான் அருகே காற்றழுத்தத் தாழ்வு மண்டலம்: தமிழகத்தின் மழை வாய்ப்பைப் பாதிக்கும்

**சென்னை,**

அந்தமான் கடல் பகுதியில் புதிய காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளது. இந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், வளிமண்டலத்தில் உள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி வருவதால் அடுத்த சில நாள்களுக்கு தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு குறைவு என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோடை வெயில் உச்சத்தை அடைந்திருப்பதால் தமிழகம் முழுவதும் அனல் காற்றுடன் கூடிய வெப்பம் வாட்டி வருகிறது. சென்னை, வேலூர், கடலூர், மதுரை, திருச்சி, சேலம், நாகப்பட்டினம் உள்ளிட்ட இடங்களில் புதன்கிழமை (மே 21) 100 டிகிரிக்கும் மேல் பதிவானது. அதிகபட்சமாக வேலூரில் 106 டிகிரி வெயில் பதிவானது. இந்நிலையில் வெப்பச் சலனம் காரணமாக தமிழகத்தில் ஆங்காங்கே மழையும் பெய்து வருகிறது.

வானிலை ஆய்வு மையத் தகவலின்படி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், விழுப்புரம், புதுக்கோட்டை, கோயம்புத்தூர், தருமபுரி, திருவண்ணாமலை, கரூர், திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களின் சில பகுதிகளில் புதன்கிழமை மழை பெய்துள்ளது.

அதிகபட்சமாக கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில் 130 மில்லி மீட்டர் மழையும், திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் 100 மில்லி மீட்டர் மழையும் பதிவானது. வெப்பச் சலனம் காரணமாக அடுத்து வரும் நாள்களிலும் தமிழகத்தில் மழை பெய்யும் என முதலில் கணிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அந்தமான் அருகே உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் தமிழகத்தின் மழை வாய்ப்பு பாதிக்கப்பட்டுள்ளது.

**இது குறித்து வானிலை மைய அதிகாரிகள் கூறியது:-** அந்தமான் அருகே கிழக்கு மத்திய வங்கக்கடலில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளது. இது மியான்மர் மற்றும் வங்கதேசத்தை நோக்கி நகர்ந்து செல்கிறது. இந்தத் தாழ்வு மண்டலமானது வளிமண்டலத்திலுள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி செல்லும்.

இதனால் சென்னை உள்பட தமிழகத்தின் பல இடங்களில் மழை வாய்ப்பு குறைந்துள்ளது. கேரளத்தில் பருவமழை அடுத்த வாரத்தில் தொடங்கும் என

எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிறகு தமிழகத்தின் வெப்பநிலை படிப்படியாகக் குறையும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

## பார்த்தீனியச் செடிகளை உரமாக மாற்றலாம்



**ஈரோடு,**

பார்த்தீனியம் களைச் செடிகளை உரமாக மாற்றலாம் என்று, ஈரோடு மாவட்டம் கோபியில் உள்ள மத்திய அரசின் வேளாண் ஆராய்ச்சி மைய, மைராடா வேளாண் ஆராய்ச்சி மைய தொழில்நுட்ப வல்லுநர் ச.சரவணகுமார் தெரிவித்துள்ளார்.

### இதுகுறித்து, அவர் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கை:

வெளிநாடுகளில் இருந்து நம் நாட்டிற்கு பரவிய பார்த்தீனியம் களை, முதன்முதலாக 1956-ஆம் ஆண்டு மகாராஷ்டிராவில் தான் கண்டறியப்பட்டது. தற்போது அனைவருக்கும் பிரச்னையை ஏற்படுத்தும் இந்த பார்த்தீனியம், திரும்பும் இடமெல்லாம் பெருகியுள்ளது.

11.5 மீட்டர் உயரம் வரை வளரக்கூடிய இந்த களைச்செடியின் இலைகள் பார்ப்பதற்கு காரட் இலைகளைப் போன்று காணப்படுவதுடன் இவை கிளைவிட்டு பூக்கும் இனத்தைச் சார்ந்தவையாகும். மேலும், நமது சாகுபடி பயிருடன் ஒப்பிடுகையில் இவை ஒவ்வொன்றும் 15,000 முதல் 25,000 விதைகளை உற்பத்தி செய்யும் தன்மை கொண்டது.

மேலும், இவ்விதைகளின் எடை மிகக் குறைவாக இருப்பதால் இவை எளிதில் காற்றின் மூலமாகவும், மனித மற்றும் விலங்குகள் செயல்பாட்டின் மூலமாகவும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எளிதில் பரவிச் செல்கிறது. இந்த களைச்செடியின் வெட்டப்பட்ட மற்றும் உடைந்த பாகங்கள் மீண்டும் துளிர்விடும் தன்மை கொண்டதாக இருப்பதால் இவை எளிதில் பரவி விடுகின்றன. இவ்வாறு பரவும் இவ்வகை களைச் செடிகள் மனிதன் மற்றும் விலங்கினங்களுக்கு ஒவ்வாமை, சுவாசக் கோளாறுகள் போன்ற நோய்களை ஏற்படுத்துவதால் இதனை முழுமையாக கட்டுப்படுத்துவது மிக முக்கியமானதாக கருதப்படுகிறது.

பல்வேறு தொழில்நுட்பங்கள் வளர்ந்துவரும் இந்தச் சூழ்நிலையிலும் இந்த களைக் கட்டுப்பாடானது உலகளவில் பெரும் சவாலாக இருப்பதுடன் தனிப்பட்ட மேலாண்மை முறைகள் மூலமாக இக்களைகளைக் கட்டுப்படுத்துவது என்பது எளிதான ஒன்றல்ல.

எனவே, பல்வேறு மேலாண்மை முறைகளை ஒருங்கிணைத்து கடைப்பிடிப்பதால் இக் களையின் பரவலாக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.

இயந்திரவியல் களைக்கட்டுப்பாடு: பெரும்பாலும் இந்த களைச் செடியானது விதைகளின் மூலமாக பரவுவதால், அந்தந்தப் பருவகாலங்களில் இச்செடிகள் பூப்பதற்கு முன் வேருடன் களைய வேண்டும்.

மேலும் இவை மனிதனுக்கு உடல் நலப் பிரச்னைகளை ஏற்படுத்துவதால் தகுந்த பாதுகாப்பு முறைகள் மூலமாக (கையுறைகள், முகக் கவசங்கள்) அகற்றப்பட வேண்டும். மேலும் பொது இடங்களில் மக்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து இச் செடிகளை பூப்பதற்கு முன் நீக்குவதால் இவை மேலும் பரவாமல் தடுக்கலாம்.

உழவியல் முறைகள்: பார்த்தீனிய களைகள் அதிகமாக உள்ள விளை நிலங்களில், அதனைவிட வேகமாக வளரும் பயிர்களான சோளம், கம்பு, சணம்பு, தக்கைப் பூண்டு போன்றவற்றை பயிரிடுவதால் இதன் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தலாம். இச் செடிகள் பூப்பதற்கு முன், விளைநிலங்களில் நீரைப் பாய்ச்சி மடக்கி உழுவதன் மூலமாக இதனைக் கட்டுப்படுத்துவதோடு, மண்ணிற்கு உரமாகவும் மாற்றிவிடுகிறது.

ரசாயன முறை: தரிசு நிலங்களில் பார்த்தீனியத்தைக் கட்டுப்படுத்த கிளைப்போசேட் 11.5 சதவீதம் அல்லது மெட்ரிப்யூசின் 0.30.5 சதவீதம் என்ற

களைக்கொல்லியை பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம். வாழை, தக்காளி மற்றும் பயிறு வகைப் பயிரிகளில் அலக்லார் என்ற களைக்கொல்லியை ஹெக்டேருக்கு 2 கிலோ வீதம் பயன்படுத்துவதன் மூலமாக இந்தப் பார்த்தீனியச் செடிகளைக் கட்டுப்படுத்தலாம்.

உயிரியல் முறைக் கட்டுப்பாடு: இந்த களைச் செடியானது இயற்கை எதிரிகள், பூஞ்சாணங்கள், நூற்புழுக்கள் மற்றும் நத்தைகள் மூலமாக எளிதில் கட்டுப்படுத்தப்படுகிறது.

குறிப்பாக, மெக்சிகன் பொறி வண்டுகளின் (சைக்கோகரம்மா பைகாலரேட்டா) மூலமாக இந்த களைச் செடிகளை முழுமையாக கட்டுப்படுத்தலாம். இவ்வகை பொறி வண்டின் ஆயுள் காலம் 22-32 நாள்களாகும். இவை நிலங்களில் 5-6 முறை இனப்பெருக்கம் அடையும் தன்மை கொண்டவை.

பொறி வண்டு மற்றும் இதன் இளம்பருவ புழுக்கள் பார்த்தீனியச் செடிகளை விரும்பி உண்ணும் தன்மை கொண்டவை. புதிதாக மற்றும் இளம் செடிகளின் மேலிருந்து கீழ்நோக்கி முழுச் செடியையும் இவை உண்பதால் நாளடைவில் எளிதில் கட்டுப்படுத்தப்படுகிறது.

கம்போஸ்ட் உரமாக மாற்றுதல்: பார்த்தீனியமானது பல்வேறு வகைளில் பல உயிரினங்களுக்கு தீங்கு விளைவித்தாலும், இதனை திறன்பட உபயோகிப்பதால், மக்கிய உரங்கள் மற்றும் மண்புழு உரம் போன்றவை தயாரிக்கலாம்.

குழிமுறை உரம் தயாரிப்பில் சேகரிக்கப்பட்ட பார்த்தீனியச் செடிகளை சிறு துண்டுகளாக வெட்டி, குழிக்குள் இட்டு அதன்மேல் சாணக் கரைசல் மற்றும் யூரியாவைத் தெளித்து பின்னர் அந்தக் குவியலை மண் கரைசல் கொண்டு மூடிவிட வேண்டும்.

50-60 நாள்களில் மக்கிய உரங்கள் தயாராகிவிடும். இவ்வாறு செய்வதன் மூலமாக தீங்கு விளைவிக்கும் களைச் செடியையும் நன்மை தரும் உரமாக மாற்றலாம்.

மேற்காணும் முறைகளை கையாண்டு பார்த்தீனிய களைகளைக் கட்டுப்படுத்துவதோடு அதனை நல்வழிகளிலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## தீவனச் செலவைக் குறைக்கும் அசோலா!



**கிருஷ்ணகிரி**: கால்நடைகளுக்குத் தேவையான பசுந்தீவனம் உற்பத்தி செய்வதில் பல இடர்பாடுகள் உள்ள நிலையில் வீட்டிலேயே குறைந்த செலவில் கால்நடைகளுக்குத் தீவனமாக பயன்படும் அசோலாவை உற்பத்தி செய்து நல்ல வருவாய் ஈட்டலாம் என கிருஷ்ணகிரி அருகேயுள்ள பெருமாள் வேளாண் அறிவியல் மையத்தினர் தெரிவித்தனர்.

பெருகி வரும் மக்கள்தொகைக்கு ஏற்ப பால், இறைச்சியின் தேவை அதிகரித்து வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 3.45 லட்சம் கறவை மாடுகளும், 4.30 லட்சம் வெள்ளாடு, செம்மறி ஆடுகளும், 7.20 லட்சம் கோழிகளும் உள்ளன. இந்த நிலையில், கால்நடைகளுக்குத் தேவையான பசுந்தீவனம் சாகுபடி செய்யும் நிலங்களின் பரப்பளவும், மேய்ச்சல் நிலங்களின் பரப்பளவும் குறைந்து கொண்டே வருகின்றன. ஆனால், பால், இறைச்சி ஆகியவற்றின் தேவை அதிகரித்து வரும் நிலையில், அடர் தீவனத்தை அதிகளவில் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலைக்கு கால்நடை வளர்ப்போர் தள்ளப்பட்டுள்ளனர். இதற்கு ஈடாக, குறைந்த இடத்தில், குறைந்த செலவில் அசோலா உற்பத்தி செய்ய வேண்டியது அவசியமாகிறது. அசோலா என்பது ஒரு வகை பெரணியாகும். உலர் எடை அடிப்படையில் அசோலாவில் 23 முதல் 35 சத புரதமும், 10 முதல் 15 சத தாது உப்புகளும், 7 முதல் 10 சத அமினோ அமிலங்களும், வளர்ச்சி ஊக்கிப் பொருள்களும் நிறைந்துள்ளது. மேலும் மாவுச்சத்து, எண்ணெய் சத்துக்களின் அளவு குறைவாகவே உள்ளது. எனவே, பசுந்தீவனத்துக்குப் பதிலாக அசோலாவை கால்நடைகளுக்குத் தீவனமாக வழங்கலாம்.

இந்த அசோலாவை அடர் தீவனத்துடன் கலந்தோ அல்லது தனியாகவோ கால்நடைகளுக்கு வழங்கலாம்.

அசோலா உற்பத்தி: நிழல்பாங்கான இடத்தில் 10 அடி நீளம், 2 அடி அகலம், ஒரு அடி ஆழம் உள்ள ஒரு பாத்தியை அமைத்து, பாத்தியின் அடித்தளத்தில் சில்பாலின் காகிதத்தை சீராக விரித்து பின் காகிதத்தின் மேல் 2 செமீ. அளவுக்கு மண் இட்டு சமமாக இருக்குமாறு செய்து கொள்ள வேண்டும். இதனுள் 2 செமீ. உயரத்துக்கு தண்ணீர் நிரப்ப வேண்டும். பின்னர், பாத்தி ஒன்றுக்கு 100 கிராம் சூப்பர் பாஸ்பேட்டுடன் 5 கிலோ பசுஞ்சாணத்தைக் கரைத்து விட வேண்டும். பின்னர், 5 கிலோ அசோலா தாய் வித்தை பாத்தியில் இட வேண்டும். தினமும் காலை அல்லது மாலையில் பாத்தியில் உள்ள மண்ணை நன்கு கலக்குவதால் மண்ணில் உள்ள சத்துக்கள் அசோலாவுக்கு எளிதாகக் கிடைக்கும். ஒரு பாத்தியில் இருந்து 15 நாள்களில் 30 முதல் 50 கிலோ அசோலா உற்பத்தி ஆகும். இவற்றில் மூன்றில் ஒரு பங்கு அசோலாவை பாத்தியிலேயே விட்டு மீதியை அறுவடை செய்து கால்நடை, கோழிகளுக்குத் தீவனமாக வழங்கலாம்.

பயன்பாடு: கறவை மாடுகளுக்கு வழங்கப்படும் தீவனத்துடன் 1:1 என்ற விகிதத்தில் அசோலாவை கலந்து கொடுப்பதன் மூலம் பால் உற்பத்தி அதிகரிக்கும். பாலின் கொழுப்புச் சத்தும் அதிகரிக்கும். கோழிகளுக்கு அப்படியே கொடுக்கலாம். ஒரு கிலோ அசோலா உற்பத்தி செய்ய 75 பைசா மட்டுமே செலவு ஆகும். ஒரு கிலோ அசோலா என்பது ஒரு கிலோ புண்ணாக்குக்கு சமம். எனவே, சிறப்புமிக்க அசோலாவை கால்நடை வளர்ப்போர்கள் குறைந்த செலவில் வளர்த்து பால், இறைச்சி ஆகியவற்றைப் பெருக்கி அதிக வருவாய் ஈட்டலாம்.

## மானாவாரி நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெற 10 வழிகள்...

**புதுக்கோட்டை,**

அண்மையில் பெய்துள்ள கோடை மழையைக் கொண்டு விவசாயிகள் மானாவாரி நிலக்கடலை விதைப்புக்குத் தயாராகி வரும் நிலையில், அதில் கூடுதல் மகசூல் பெற 10 வழிமுறைகளைக் கடைப்பிடிக்கலாம் என வேளாண்துறை யோசனை தெரிவித்துள்ளது.

அதன் விவரம்:

1. கோடை உழவால் களைகள் கட்டுப்படுத்தப்படுவதோடு மண்ணில் நீர் சேமிக்கும் திறன் அதிகமாகி வறட்சியைத் தாங்கி பயிர் வளரும்.

2. ஏக்கருக்கு 5 மெட்ரிக் டன் தொழு உரம் அல்லது மக்கிய தென்னை நார்க்கழிவு இட்டு உழவு செய்ய வேண்டும்.

3. மானாவாரி நிலக்கடலையில் வறட்சியைத் தாங்க விதைகளைக் கடினப்படுத்தி விதைப்பு செய்ய வேண்டும். 55 கிலோ விதை பருப்புகளை 125 மில்லிகிராம் கால்சியம் குளோரைடுடன் 25 லிட்டர் தண்ணீரைக் கலந்து 6 மணி நேரம் ஊறவைக்கவும். பின்பு நீரை வடிகட்டி விதைகளை ஈரமான சாக்கின் மேல் பரப்பி அதன்மேல் மற்றொரு ஈரமான சாக்கைக் கொண்டு மூடவும். பின் 24 மணிநேரம் கழித்து முளைவிட்ட விதைகளை தனியே பிரித்தெடுத்து நிழலில் உலர வைக்கவும். பின் 2-3 முறை இரண்டு மணிநேர இடைவெளியில் மேற்கண்டவாறு செய்து நன்கு முளைகட்டிய விதைகளை பிரித்தெடுத்த பின்பு விதைக்க வேண்டும்.

4. விதை நோ6த்தி செய்து விதைக்கவும். (ஒரு கிலோ விதைக்கு நான்கு கிராம் டிரைகோடொ6மா விரிடி மருந்தைக் கலந்து உடன் விதைத்தால் விதை மூலம் பரவும் நோய்களான வேரழுகல் போன்ற நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.

5. விதையளவு ஏக்கருக்கு 55 கிலோ விதைகடலை பருப்புகளை பயன்படுத்தி செடிக்கு செடி 10 செ.மீ. இடைவெளியும், வரிசைக்கு வரிசை 30 செ.மீ. இடைவெளியும் இருக்குமாறு விதைக்க வேண்டும். (பயிர் எண்ணிக்கை ஒரு சைக்கிள் டயருக்கு 11 செடிகள்)

6. உயிர் உரங்கள் ரைசோபியம் (நிலக்கடலை) மற்றும் பாஸ்போபாக்டீரியா ஏக்கருக்கு தலா 4 பாக்கெட் (800 கிராம்) 10 கிலோ தொழுவுரம் மற்றும் 10 கிலோ மணலுடன் கலந்து வயலில் இட வேண்டும்.

7. ஜிப்சம் ஏக்கருக்கு 80 கிலோ அடியுரமாகவும், 80 கிலோ ஜிப்சத்தை 40-50 -வது நாளில் மண் ஈரத்திற்கேற்ப 2-வது களையெடுக்கும் சமயம் இட்டு மண் அணைக்கவும். இதனால் விழுதுகள் நன்கு இறங்கி அதிகக் காய்கள் பிடிப்பதுடன் பொக்கற்ற திரட்சியான நிலக்கடலை கிடைக்கும்.

8. மானாவாரி நிலக்கடலையில் ஊடுபயிராக துவரை, உளுந்து, தட்டைபயறு, ஆமணக்கு போன்ற பயிர்களைச் சாகுபடி செய்ய வேண்டும். இதனால் பூச்சி, நோய்கள் கட்டுப்படுத்தப்படுவதோடு கூடுதல் வருமானமும் கிடைக்கும்.

9. மானாவாரி நிலக்கடலையில் வறட்சியைத் தாங்கவும், அதிகக் காய்கள் பிடிக்கவும், 1 சத பொட்டாஷ் கரைசலைத் தெளிக்க வேண்டும்.

10. பூச்சி நோய்களைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இந்த வழிமுறைகளைப் பின்பற்றி மானாவாரி நிலக்கடலை விதைப்பு செய்து விவசாயிகள் சத்தான காய்களைக் கொத்து கொத்தாக பெற்று கூடுதல் மகசூலும், லாபமும் பெறலாம் என புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் கே.எம்.ஷாஜஹான், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத் துணை இயக்குநர் வ. சாந்தி மற்றும் வேளாண் அலுவலர் எஸ். ராஜசேகரன் ஆகியோர் தெரிவித்தனர்.

## 30-இல் விவசாயிகள் குறைதீர்க் கூட்டம்

**காஞ்சிபுரம்,**

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வரும் மே 30-ஆம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெறவுள்ளது. மக்களவைத் தேர்தல் நடத்தை விதிகள் முடிவுக்கு வந்துள்ளதால், மீண்டும் அரசு நிர்வாகம் வழக்கம்போல் செயல்பட தொடங்கியுள்ளது. இதனைத்தொடர்ந்து வரும் 30-ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள ஊரக வளர்ச்சித்துறைக் கட்டடத்தில் மாவட்ட ஆட்சியர் தலைமையில், விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறவுள்ளது.

## கொடைக்கானலில் வால் பேரிக்காய் விளைச்சல் குறைவு: விலை அதிகம்

**கொடைக்கானல்,**

கொடைக்கானலில் பருவமழை பெய்யாததால், வால் பேரிக்காய் விளைச்சல் வெகுவாகக் குறைந்தது. இதனால், விலை அதிகரித்துள்ளது. கொடைக்கானலில்

பேரி, பிளம்ஸ், செர்ரி புரூட், மரத் தக்காளி, பலா போன்றவைகள் விளைகின்றன. இதில், வால் பேரிக்காய் கொடைக்கானல் பகுதிகளான பெரும்பள்ளம், சின்னப்பள்ளம், குருசடிமெத்து, அஞ்சுவீடு, பேத்துப்பாறை, அடுக்கம், பாலமலை, தாமரைக்குளம் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் சாகுபடி செய்யப்படுகின்றன.

கடந்த 3 ஆண்டுகளாகவே போதிய பருவமழை இல்லாததால், பழங்களின் விளைச்சல் வெகுவாகக் குறைந்து வருகிறது. இதில், மார்ச், ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்களில் வளரும் பேரிக்காயில் சாதாரண பேரி, முள்பேரி, தண்ணீர் பேரி, வால்பேரி, இனிப்பு பேரி, ஊட்டி பேரி போன்றவைகள் விளைகின்றன.

இவற்றுள், வால்பேரி நல்ல சுவையாக இருப்பதால், சுற்றுலாப் பயணிகள் அதிகமாக விரும்பி வாங்கிச் செல்கின்றனர். தற்போது, பருவமழை இல்லாததால் விளைச்சல் வெகுவாகக் குறைந்துள்ளது. கிலோ ரூ. 50 முதல் ரூ. 60 வரைக்கும் விற்கப்பட்ட வால்பேரி, தற்போது ரூ. 120 முதல் ரூ. 160 வரை விற்பனையாகிறது.

இது குறித்து, விவசாயிகள் கூறுகையில், கொடைக்கானலில் ஊடு பயிராக பேரிக்காய், அவக்கேடோ, பலா போன்ற மரங்களை பராமரித்து வருவதால், அந்தந்தக் காலங்களில் வரும் காய்களை விற்பனை செய்து வருவது வழக்கம். தற்போது, வால்பேரிக்காய் சீசனாக இருந்தும், பருவமழை இல்லாத காரணத்தால் விளைச்சல் வெகுவாக பாதிப்பு அடைந்துள்ளது. இதனால், விலை அதிகமாக உள்ளது என்றனர்.

## திண்டுக்கல் பகுதியில் மழை: வெப்பம் தணிந்தது

**திண்டுக்கல்,**

திண்டுக்கல் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் புதன்கிழமை பெய்த மழையால், வெப்பம் தணிந்தது.

திண்டுக்கல் மாவட்டத்தில் போதிய மழையில்லாததால், கடந்த சில மாதங்களாக ஏற்பட்ட கடுமையான வெப்ப நிலையால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வந்தனர். பல இடங்களிலும் நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால், குடிநீர் பிரச்னையும் அதிகரிக்கத் தொடங்கியது.

அக்னி நட்சத்திரம் தொடங்கியது முதல் அவ்வப்போது, மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பரவலாக மழை பெய்தது. இருப்பினும், கடந்த சில நாள்களாக மழை பெய்யாததால், மீண்டும் வெப்பநிலை அதிகரிக்க தொடங்கியது. இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை பழனி, வேடசந்தூர், கொடைக்கானல் உள்ளிட்ட சில பகுதிகளில் மட்டும் லேசான மழை பெய்தது. இந்த பகுதிகளில் புதன்கிழமை காலை வரை பதிவான மழை அளவு விவரம்(மி.மீட்டரில்): பழனி 2.00, வேடசந்தூர் 3.14, சத்திரபட்டி 101.60, வேடசந்தூர் புகையிலை மையம் 4.08, கொடைக்கானல் போட் கிளப் 1.75, காமாட்சிபுரம் 1.60.

அதன் தொடர்ச்சியாக, திண்டுக்கல் நகர் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் புதன்கிழமை பிற்பகலில் 30 நிமிடங்களுக்கும் மேலாக பலத்த மழை பெய்தது. இதனால், திண்டுக்கல், சாணார்பட்டி பகுதிகளில் உள்ள தாழ்வான இடங்களில் மழை நீர் தேங்கியது. இதேபோல், செம்பட்டி, சின்னாளப்பட்டி பகுதிகளிலும் லேசான மழை பெய்தது.

கோடை காலத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழையால், விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## சிவகங்கை தோட்டக் கலை பண்ணைகளுக்கு நட்சத்திர அந்தஸ்து

**சிவகங்கை,**

சிவகங்கை மாவட்டத்தில் தோட்டக் கலைப் பண்ணைகளுக்கு நட்சத்திர அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாக சிவகங்கை தோட்டக் கலைத் துறை துணை இயக்குநர் (பொ) எம். பாலமுருகன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

சிவகங்கை மாவட்டத்தில் தோட்டக் கலைத் துறை மூலம் தேவகோட்டை மற்றும் நேமத்தில் தோட்டக் கலைப் பண்ணைகள் நடத்தப்பட்டு வருகிறது. இந்தப் பண்ணைகள் மூலம் சிவகங்கை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்ட விவசாயிகளுக்கு மா, கொய்யா, முந்திரி, நெல்லி, மல்லிகை மற்றும் அலங்காரச் செடிகளின் தரமான உயர் விளைச்சல் கன்றுகள் உற்பத்தி செய்து வினியோகிக்கப்பட்டு வருகிறது.

இந்த பண்ணைகளுக்கு தேசிய அளவில் தர நிர்ணயம் பெற தேசிய தோட்டக் கலை வாரியத்திடம், தோட்டக்கலை ஆணையர் மூலம் விண்ணப்பிக்கப்பட்டது. இதனடிப்படையில் தில்லியிலிருந்து தோட்டக் கலைத் துறை இயக்குநர் எஸ்.பி. சிங் தலைமையில் விஞ்ஞானிகள் குழு தேவகோட்டை மற்றும் நேமம் அரசு பண்ணைகளில் ஆய்வு மேற்கொண்டது. பயிர் வாரியாக உயர் விளைச்சல் ரக தாய் மரக்கன்றுகள் பராமரிப்பு, நவீன ஒட்டுக்கட்டும் முறைகள், வீரிய ஒட்டுக் கன்றுகளின் பராமரிப்பு, ரக வாரியாக குறியீடு செய்து விவசாயிகளுக்கு வினியோகம் செய்தல் போன்ற பணிகளை இக்குழுவினர் ஆய்வு செய்தனர்.

இக்குழுவின் ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் தேசிய தோட்டக் கலை வாரியம் நேமம் அரசு தோட்டக் கலைப் பண்ணைக்கு 3 நட்சத்திர குறியீடும், தேவகோட்டை பண்ணைக்கு 2 நட்சத்திர குறியீட்டினை 2 ஆண்டுகளுக்கு வழங்கி உள்ளது. நட்சத்திர அந்தஸ்து பெற்றுள்ள தேவகோட்டை பண்ணையின் மூலம் நடப்பு ஆண்டில் 6 லட்சம் தரமான வீரிய ஒட்டு மற்றும் உயர் விளைச்சல் ரக கன்றுகளும், நேமம் பண்ணையின் மூலம் 4.3 லட்சம் கன்றுகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட உள்ளதாக தோட்டக்கலை துணை இயக்குநர் (பொ) எம். பாலமுருகன் தெரிவித்துள்ளார்.

## சாத்தூரில் பலத்த காற்று, இடியுடன் மழை

**சாத்தூர்,**

சாத்தூரில் பலத்த இடியுடன் கூடிய மழை பெய்தது. இதில் ஏராளமான மரங்கள் சாய்ந்து விழுந்தன.

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் பகுதியில் கடந்த சில தினங்களாக வெயில் சுட்டெரித்து வந்த நிலையில் புதன்கிழமை பிற்பகல் திடீரென பலத்த காற்று மற்றும் இடியுடன் கூடிய மழை பெய்ய தொடங்கியது. இதையடுத்து சாத்தூர் மற்றும் அதனை சுற்றியுள்ள ஏழாயிரம்பண்னை, தாயில்பட்டி, படந்தால் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேல் பெய்த மழையால் இப்பகுதி பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மிகுந்த மகிழ்சியடைந்தனர். இந்த மழையால் சாத்தூர் பிரதான சாலையில் உள்ள நீதிமன்றம், பைப்பாஸ் சாலை, சர்வீஸ் சாலை, வாழவந்தாள்புரம் உள்ளிட்ட பகுதியில் தண்ணீர் குளம் போல் தேங்கியது.

மேலும் சர்வீஸ் சாலையில் வாறுகால் வசதி இல்லாததால் தண்ணீர் அதிகமாக தேங்கிநிற்பதாக அப்பகுதியினர் தெரிவித்தனர்.

சாலைகளில் இதுபோன்று தண்ணீர் தேங்கி நிற்பதால்,சாலையில் செல்லும் இரு சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கும் இடையூறு ஏற்படுகிறது. அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகன ஒட்டுநர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் பலத்த காற்று வீசியதால் சாத்தூர் பேருந்து நிலையம் அருகே உள்ள கடையின் மேற்கூரை பறந்து,பேருந்து நிலையத்தில் உள்ள மேற்கூரையின் மீது விழுந்தது. இதில்,பேருந்துநிலையம் மேற்கூரை சேதமடைந்துள்ளது. இதே போன்று சிலோன் காலனி பகுதியில் ஏராளமான மரங்கள் சாய்ந்து மின் வயர்கள் அறுந்துள்ளன. ஒரு சில வீடுகளும் சேதமடைந்துள்ளன.

அருப்புக்கோட்டையில் சாரல் மழை: அருப்புக்கோட்டையில் கடந்த ஒரு வாரமாக மழை ஏதும் பெய்யவில்லை. மீண்டும் கோடை வெயில் வாட்டி எடுத்த நிலையில் புதன்கிழமை பிற்பகல் சுமார் 3.40 மணிக்கு இடி, மின்னலுடன் சாரல் மழை பெய்தது. இந்த மழை சுமார் 50 நிமிடங்கள் நீடித்தது. இந்த மழையால் தெருக்களில் மழைநீர் தேங்கியது. திடீர் மழையால் நகரில் வெப்பம் தணிந்தது.

## <u>சிறுமுகை பகுதியில் கனமழை: 2 லட்சம் வாழை மரங்கள் சேதம்</u>

**மேட்டுப்பாளையம்,**

மேட்டுப்பாளையத்தை அடுத்த சிறுமுகை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை இரவு பலத்த சூறைக் காற்றுடன் பெய்த கனமழையால், அறுவடைக்கு தயாராக இருந்த 2 லட்சத்திற்கும் மேற்பட்ட வாழை மரங்கள் சேதமடைந்தன.

சிறுமுகை, லிங்காபுரம், புதுக்காடு, காந்தவயல், பெத்திக்குட்டை, மூலையூர், மொக்கை மேடு உள்ளிட்ட பகுதிகளிலும், சிறுமுகையை அடுத்த பவானி அணையின் நீர் தேக்கப்பகுதிகளிலும் சுமார் 15 லட்சத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகள் வாழை பயிர் செய்துள்ளனர். அறுவடைக்கு இன்னும் ஒருமாத காலமே இருந்த நிலையில், வாழைகள் நன்கு முற்றிய பக்குவத்தில் இருந்தன.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை இரவு சிறுமுகை, அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் திடீரென பலத்த மழை பெய்தது. இதில், மழையுடன், சூறாவளி காற்றும் வீசியதால் அப்பகுதியில் பயிரிடப்பட்டிருந்த வாழை மரங்கள் வேரோடு சாய்ந்தன.

சிறுமுகை அருகே லிங்காபுரம், புதுக்காடு, மொக்கைமேடு, வச்சினம்பாளையம், மூலையூர், காந்தவயல், மூலத்துறை, பவானி நீர் தேக்கப் பகுதிகளில் பயிரிடப்பட்டிருந்த 2-லட்சத்திற்கும் மேற்பட்ட வாழைகள் முற்றிலும் சேதமடைந்தன. சேத மதிப்பு சுமார் ரூ. 50 லட்சத்திற்கும் மேல் இருக்கும் எனக் கூறப்படுகிறது.

## வெள்ளக்கோவில்: ரூ. 32 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

**வெள்ளக்கோவில்,**

வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் புதன்கிழமை ரூ. 32 லட்சத்து 78 ஆயிரத்து 797-க்கு கொப்பரை ஏலம் மூலமாக விற்பனையானது.

வெள்ளக்கோவில், காங்கயம் சாலையிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வாரந்தோறும் புதன்கிழமை கொப்பரை ஏலம் நடைபெறும்.

இந்த வாரம் ஏலத்திற்கு 34 ஆயிரத்து 392 கிலோ கொப்பரை 686 மூட்டைகளில் கொண்டு வரப்பட்டிருந்தன.

ஏலத்தில் அதிகபட்ச விலையாக கிலோ ரூ. 106.50-க்கும், குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ. 82.65-க்கும் ஏலம் போனது.

திருப்பூர், ஈரோடு, கரூர், திண்டுக்கல் மாவட்டங்களிலிருந்து விவசாயிகள் கொப்பரைகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். காங்கயம், ஈரோடு பகுதிகளிலிருந்து வந்திருந்த வியாபாரிகளும், எண்ணெய் ஆலை உரிமையாளர்களும் ஏலத்தில் பங்கேற்றனர்.

கடந்த வாரத்தைவிட, வரத்து 50 சதவீதம் அதிகரித்திருந்த நிலையில், விலையும் கிலோவுக்கு ரூ. 3 அதிகரித்திருந்தது.

## பல்லடம் கறிக்கோழி கொள்முதல் விலை வீழ்ச்சி

**பல்லடம்,**

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம், பல்லடத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் பி.சி.சி. (பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

செவ்வாய்க்கிழமை கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 73-ஆக இருந்தது. கோழி இறைச்சி விற்பனை குறைவால் புதன்கிழமை கிலோ ரூ. 65-ஆக குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முட்டை விலை:

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ. 3.25, சென்னையில் ரூ. 3.57.

## தொப்பையாறு அணைப் பகுதியில் 43 மி.மீ. மழை

**தருமபுரி,**

தருமபுரி மாவட்டம், தொப்பையாறு அணைப் பகுதியில் 43 மி.மீட்டர் மழை பெய்தது.

தருமபுரி மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை இரவு இடி, மின்னல், சூறாவளிக் காற்றுடன் பலத்த மழை பெய்தது.

இந்த மழையில் சாமிசெட்டிப்பட்டி பகுதியில் தனியாருக்குச் சொந்தமான செங்கல் சூளை முற்றிலும் கரைந்தது. அதேபோல, நல்லம்பள்ளி கொட்டாய்மேடு, குரும்பட்டி ஆகிய பகுதிகளில் தென்னை, வாழை உள்ளிட்ட மரங்கள் சாய்ந்தன.

மேலும், சில இடங்களில் வீடுகளின் மேல்கூரை வேகமாக வீசிய காற்றில் அடித்துச் செல்லப்பட்டன. இதேபோல புதன்கிழமை இரவு சுமார் 11 மணியளவில் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதனால், தருமபுரி அதியமான் சாலை உள்ளிட்ட நகரின் முக்கிய சாலைகள் மழைநீர் வெள்ளம் போல பெருக்கெடுத்து ஓடியது.

புதன்கிழமை காலை 8 மணி வரை கடந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் பதிவான மழையளவு (மி.மீ.): தொப்பையாறு அணை- 43, பாப்பிரெட்டிப்பட்டி- 24.30, நாகவதி அணை- 24, ஆட்சியர் அலுவலகம்- 19, மாரண்டஹள்ளி- 15, பென்னாகரம்- 15, ஒகேனக்கல்- 12.20, தருமபுரி 8

## பரமத்திவேலூர் ஏலச் சந்தையில் வெற்றிலை விலை சரிவு

**பரமத்திவேலூர்,**

பரமத்திவேலூர் ஏலச் சந்தையில் வெற்றிலையின் வரத்து அதிகரித்துள்ளதால், வெற்றிலையின் விலை சரிவடைந்துள்ளது.

பரமத்திவேலூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் வெற்றிலை பயிர் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் வெள்ளைக்கொடி வெற்றிலை , பச்சைக்கொடி, கற்பூரி ஆகிய மூன்று வகை வெற்றிலைகள் பயிர் செய்யப்படுகின்றன. இங்கு விளையும் வெற்றிலைகள் பரமத்திவேலூர் நான்கு சாலையில் நடைபெறும் வெற்றிலை ஏலச் சந்தைக்கு கொண்டு வரப்பட்டு ஏலம் விடப்படுகின்றன.

இங்கு நடைபெறும் ஏலத்துக்கு பரமத்திவேலூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் இருந்தும் , திருச்சி , கரூர் ஆகிய மாவட்டங்களில் இருந்தும் வெற்றிலைகள் ஏலத்துக்கு கொண்டு வரப்படுகின்றன. ஏலத்தில் வெற்றிலைகளின் தரத்திற்கு தகுந்தாற்போல் ஏலம் விடப்படுகிறது. ஏலம் எடுப்பதற்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் , கேரளத்தில் இருந்தும் வியாபாரிகள் வந்து செல்கின்றனர். ஏலம் எடுக்கப்படும் வெற்றிலைகள் லாரிகள் மூலம் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும் , இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் (104 கவுளிகள் கொண்ட சுமை ஒன்று) வெள்ளைக்கொடி இளம்பயிர் வெற்றிலை ரூ.4 ஆயிரத்துக்கும் , கற்பூரி வெற்றிலை இளம்பயிர் ரூ.3 ஆயிரத்துக்கும் ஏலம் போனது. முதியம் பயிர் வெள்ளைக்கொடி வெற்றிலை சுமை ஒன்று ரூ.2 ஆயிரத்துக்கும் ஏலம் போனது. புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக்கொடி இளம்பயிர் வெற்றிலை ரூ.3 ஆயிரத்துக்கும், கற்பூரி வெற்றிலை இளம்பயிர் ரூ.2 ஆயிரத்து 300-க்கும் ஏலம்

போனது. முதியம் பயிர் வெள்ளை வெற்றிலை சுமை ஒன்று ரூ.1,500-க்கும் ஏலம் போனது.

தற்பொழுது அதிக அளவில் வெற்றிலையின் வரத்து அதிகரித்துள்ளதாலும் , விஷேச காலங்கள் தற்பொழுது அதிகம் இல்லாததாலும் வெற்றிலையின் விலை சரிவடைந்துள்ளது என விவசாயிகள் தெரிவித்தனர்.

## கால்நடைத் தீவன மேலாண்மைப் பயிற்சி

**தஞ்சாவூர்,**

தஞ்சாவூரில் நடைபெறவுள்ள கால்நடைகளுக்கான தீவன மேலாண்மை பயிற்சி மற்றும் முதலுதவி மூலிகை மருத்துவப் பயிற்சியில் ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தஞ்சாவூரில் செயல்படும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத் தலைவர் என். புண்ணியமூர்த்தி வெளியிட்ட அறிக்கை:

தஞ்சாவூர் - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அருகே இயங்கிவரும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், வரும் வெள்ளிக்கிழமை (23-ஆம் தேதி) கால்நடைகளுக்கான தீவன மேலாண்மை மற்றும் முதலுதவி மூலிகை மருத்துவம் பற்றிய பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இதில் பங்கேற்க ஆர்வமுடையவர்கள் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நேரில் வர வேண்டும். மேலும் விவரங்களுக்கு, பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அருகில், தஞ்சாவூர் என்ற முகவரியிலோ, 98424-55833, 04362-204009 என்ற எண்களிலோ தொடர்பு கொள்ளலாம்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வங்கக்கடலில் புயல் சின்னம்

**சென்னை**: வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் தீவிரமடையும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மத்திய கிழக்கு வங்கக்கடலில், அந்தமானிற்கு வடக்கு - வடமேற்கில், 490 கி.மீ., தொலைவில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம், அடுத்த, 24 மணி நேரத்தில் தீவிரமடையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தாழ்வு மண்டலம், தொடர்ந்து, வடக்கு நோக்கி நகர்ந்து வருகிறது. இதன் காரணமாக, அடுத்த, 24 மணி நேரத்தில், அந்தமான் பகுதியில், அதிக மழை பெய்யும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக, கடல் கொந்தளிப்புடன் இருப்பதால், காரைக்கால், கடலூர் துறைமுகங்களில், 1ம் எண் புயல் கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. நேற்று பகலில், சென்னையில் வெப்பநிலை சற்றே உயர்ந்து, அனல் காற்றின் தாக்கமும் அதிகரித்து காணப்பட்டது.

## இந்திய மாம்பழங்களுக்கு தடை விலக்கிக்கொள்ள வலியுறுத்தல்

**லண்டன்:** "இந்திய மாம்பழங்களுக்கு, ஐரோப்பிய யூனியன் விதித்துள்ள தடையை விரைந்து விலக்கிக் கொள்ள வேண்டும்' என, பிரிட்டன், எம்.பி., கீத் வாஸ் வலியுறுத்தியுள்ளார்.

ஏற்றுமதி கடும் பாதிப்பு : இந்தியாவிலிருந்து, ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அல்போன்சா மாம்பழங்கள் சிலவற்றில், பூச்சி தொற்று இருந்ததால், இம்மாதம் 1ம் தேதி முதல், 2015 டிசம்பர் வரை, இந்திய மாம்பழங்கள் இறக்குமதிக்கு, ஐரோப்பிய நாடுகள் தடை விதித்துள்ளன. இதனால், இந்த மாம்பழ ஏற்றுமதி, கடும் பாதிப்படைந்துள்ளது. இந்திய மாம்பழங்கள் இறக்குமதி

தடையை விலக்க வேண்டும் என தொடர்ந்து பிரசாரம் செய்தும், அடிக்கடி, பிரிட்டன் பார்லிமென்டில் பேசியும் வரும் கீத் வாஸ், வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: இந்தியாவின் அல்போன்சா மாம்பழங்களுக்கு, ஐரோப்பிய யூனியன் விதித்துள்ள தடை, விரைவில் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும். இந்த ஆண்டின் மாம்பழ சீசன் இன்னும் சில மாதங்களில் நிறைவடைய உள்ளன. அதற்குள் இந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும். விதிமுறைகளின் படி இந்தியாவில் மாம்பழ விளைச்சலை நம்பி ஏராளமானோர் உள்ளனர். அவர்களை சந்தித்து, இந்தந்த விதிமுறைகளின் படி மாம்பழங்கள் வேண்டும் என தெரிவித்தால், எதிர்காலத்தில் எந்த குழப்பமும் இல்லாமல், இந்தியாவிலிருந்து மாம்பழங்கள், ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு ஏற்றுமதியாகும். இந்த விவகாரத்தில், ஐரோப்பிய யூனியனுக்கு, பிரிட்டன் தேவையான அறிவுரைகள் வழங்க வேண்டும். இவ்வாறு, அவர் தன் கடிதத்தில் எழுதியுள்ளார்.

## பாலக்காடு அருகே அரியவகை தாவரங்களை வளர்க்கும் மனிதர்: இன்று உலக பல்லுயிர் பரவல் தினம்



**பாலக்காடு**: அரியவகை தாவரங்களை வளர்ப்பதை பொழுது போக்காக கொண்டுள்ளார் கேரள மாநிலம் பாலக்காடு மண்ணார்க்காட்டை சேர்ந்த உபைதுல்லா.

மனித குலத்திற்கு பயன்தரும் அரியவகை தாவரங்களை கண்டறிந்து, தனது நிலத்தில் பாதுகாத்து வளர்க்க, உபைதுல்லா பெரும் முயற்சி மேற்கொண்டு

வருகிறார். ஒரு காலத்தில் கேரளாவில் பரவலாக காணப்பட்டு, தற்போது அரிதாகி வரும், அடதாப்பு (எயர் பொட்டாட்டோ), புளி வெண்டைக்காய், நெய் பூசணி, நித்ய கத்திரிக்காய், பல்வேறு வகையிலான மிளகாய், தக்காளி கத்தரிக்காய், கணபதி எலுமிச்சை, நாட்டு கிழங்கு வகைகள், சிறு கிழங்கு, முக்கிழங்கு, வள்ளி கீரை உள்ளிட்ட கீரைகள், சர்க்கரை சேம்பு, நாட்டு வெண்டை, நாட்டு செம்பருத்தி, தச புஷ்பம், காட்டு பாகற்காய், காட்டு புடலங்காய், நாட்டு குறுந்தோட்டி, இலந்தப்பழம் உள்ளிட்ட அரிய வகை செடிகளை உபைதுல்லா வளர்த்து வருகிறார். பனையை பாதுகாக்க, காஞ்சிரப்புழை கால்வாய் அருகே பனைகளையும், நாட்டு மாங்காய் மரங்களையும் வளர்க்கும் செயலில் தற்போது இறங்கியுள்ளார் உபைதுல்லா. அரிய தாவரங்களை பாதுகாக்க, உபைதுல்லாவின் தலைமையில் 'அதிஜீவனம்' என்ற பெயரில் இயக்கம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. இது தொடர்பாக, பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் நடைபெற்று வருகின்றன. விதைகள், மரக்கன்றுகளை ஆர்வமுள்ள பொதுமக்களுக்கு இலவசமாக வழங்குவதே இந்த இயக்கத்தின் நோக்கம். 'ஹரிதா பார்மேழ்ஸ் கிளப்' செயலர், தச்சம்பாறை பஞ்சாயத்து உயிரியல் பாதுகாப்பு உறுப்பினர், விவசாய வளர்ச்சி சமிதி உறுப்பினர், ஆத்ம சொசைட்டி இயக்குனர் ஆகிய பொறுப்புகளை உபைதுல்லா வகித்து வருகிறார்.

## விளைச்சல் குறைவால் பிளம்ஸ், பேரிக்காய் விலை உயர்வு

**ஊட்டி**: நீலகிரியில் விளையும் வால்பேரிக்காய், பிளம்ஸ் பழங்களின் விளைச்சல் குறைந்ததால், விலை இரு மடங்காக உயர்ந்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசன் களைகட்டும் ஏப்ரல், மே மாதங்களில், வால் பேரிக்காய் மற்றும் பிளம்ஸ் பழங்கள் அதிகம் விற்பனைக்கு வரும்.

மகசூலில் அடி : கடந்தாண்டு, காலநிலை மாற்றத்தால் மழை குறைந்து, வால்பேரி மற்றும் பிளம்ஸ் பழங்களின் மகசூலில் அடி விழுந்தது. பொதுவாக, ஏப்., இரண்டாம் வாரத்தில், வால்பேரி அறுவடை செய்யப்பட்டு, விற்பனைக்கு வந்து விடும் . ஆனால், இந்தாண்டு மே இரண்டாம் வாரத்தில் தான் பேரிக்காய்கள்

அறுவடை செய்யப்பட்டு, விற்பனைக்கு வந்துள்ளன. கடந்தாண்டு, கிலோ, -80 ரூபாய் வரை விற்கப்பட்ட வால்பேரி, இம்முறை, 150 ரூபாய் வரை கடைகளில் விற்கப்படுகிறது.

பழ வியாபாரி கோபி கூறியதாவது: காலம் தவறிய மழையால், பிளம்ஸ் விளைச்சலிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் அறுவடைக்கு தயாராகும் பிளம்ஸ் பழங்கள், இம்முறை, மே முதல் வாரத்தில் தான் அறுவடைக்கு வந்தன. பிளம்ஸ் மரங்களில், பூக்கள் பூக்கத் துவங்கிய போது, பல இடங்களில் கடும் பனி மூட்டம் ஏற்பட்டதால், பூக்கள் உதிர்ந்து, மகசூலில் அடி விழுந்தது; தவிர, பிளம்ஸ் பழங்களில், கரும்புள்ளிகள் போன்று ஏற்பட்டு, காய்கள் சிறுத்து போயின. சீசன் வியாபாரமாக... : ஒரு கிலோ, 100 ரூபாய்க்குள் விற்கப்பட்டு வந்த பிளம்ஸ் பழங்கள், தற்போது, 150 முதல்,- 200 ரூபாய் வரை விற்கப்படுகின்றன. நீலகிரி பேரிக்காய் மற்றும் பிளம்ஸ் பழ விற்பனையை, சீசன் வியாபாரமாக செய்து வந்தோம். விற்பனை குறைந்ததால் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கவில்லை. இவ்வாறு, அவர் கூறினார்.

## வைக்கோல் விற்பனை 'அமோகம்' ஆர்வத்துடன் வாங்கி செல்லும் விவசாயிகள்

**திருத்தணி** : கால்நடை துறையின் மூலம், மானிய விலையில் விற்கப்படும் வைக்கோலை (உலர் தீவனம்) விவசாயிகள் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். திருவள்ளூர் மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால், கால்நடைகளுக்கு தீவனம், பற்றாக்குறை அதிகரித்து வந்தது. இதையடுத்து, கால்நடைகளுக்கு மானிய விலையில், வைக்கோல் (உலர் தீவனம்) ஒரு கிலோ இரண்டு ரூபாய் என, விவசாயிகளுக்கு விற்பனை செய்வதற்கு, கால்நடை துறை முடிவு செய்தது. திருத்தணி கோட்டத்தில் கனகம்மாசத்திரம் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் வைக்கோல் கிடங்கு, கடந்த பிப்.,16ம் தேதி திறக்கப்பட்டது. அரசு ஒரு கிலோ வைக்கோல், 7.50 ரூபாய்க்கு வாங்கி, மானிய விலையில், இரண்டு ரூபாய்க்கு விவசாயிகளுக்கு விற்பனை செய்தது. விவசாயிகள் ஆர்வத்துடன் வைக்கோல் கிடங்கிற்கு வந்து, வைக்கோல் வாங்கி செல்கின்றனர். இதுகுறித்து, திருத்தணி

கோட்ட கால்நடை உதவி இயக்குனர் செல்லத்துரை கூறியதாவது: வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ், வைக்கோலை மானிய விலையில் விற்க அரசு உத்தரவிட்டது. இந்த கிடங்கிற்கு, 130 டன் வைக்கோல் அனுப்பி வைக்கப்பட்டது. நான்கு மாதத்திற்குள் விற்க வேண்டும் என, வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஆனால், விவசாயிகள் ஆர்வத்துடன் தினமும் வந்து வாங்கி செல்கின்றனர். கடந்த, 15ம் தேதி வரை, 120 டன் வைக்கோல் விற்பனையாகியுள்ளது. மீதமுள்ள பத்து டன் வைக்கோலும் இம் மாதம் இறுதிக்குள் விற்பனையாகி விடும். அடுத்த மாதம், மானிய விலையில் விற்கப்பட்ட பணத்திற்கு மீண்டும் வைக்கோல் கொள்முதல் செய்து, விவசாயிகளுக்கு தொடர்ந்து மானிய விலையில் வைக்கோல் விற்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## ரிஷிவந்தியம் பகுதியில் பலத்த காற்றுடன் மழை

**ரிஷிவந்தியம்**: ரிஷிவந்தியம் பகுதி யில் பலத்த காற்றுடன் மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ரிஷிவந்தியம் பகுதி விவசாய நிலங்களை அதிகம் உள்ளடக்கிய பகுதியாகும். இப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9:40 மணியளவில் பலத்த காற்றுடன் மழை பெய்தது. ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பெய்ததால் விவசாய நிலங்களில் உள்ள கிணறுகளில் நீர்மட்டம் சிறிது உயர்ந்துள்ளது. இதனால் ரிஷிவந்தியம் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பலத்த காற்று வீசியதால் ஆங் காங்கே வாழை மரங்கள் மற்றும் கரும்பு பயிர்கள் சாய்ந்தன.

## சுழல் நீர் பாசன முறையில் மரவள்ளி சாகுபடி

**கச்சிராயபாளையம்**: மட்டப்பாறை கிராமத்தில் சுழல் நீர் பாசன முறையில் மரவள்ளி பயிரிடப்பட்டுள்ளது. கச்சிராயபாளையம் பகுதியில் விவசாயம் அதிகளவில் செய்யப்படுகிறது. மாவட்டத்தில் நிலவும் வறட்சியை சமாளிக்க விவசாயிகள் பல புதிய முயற்சிகளை மேற்கொள்கின்றனர். பயிர்களுக்கு பாசனம் செய்வதில் சாதாரண பாசனம், சொட்டுநீர் பாசனம், சுழல் நீர் பாசனம்

செய்கின்றனர். சாதாரண பாசன முறையில் தண்ணீர் அதிகளவில் செலவிடப்படுகிறது. தண்ணீர் தேவையை குறைக்கவும் குறைந்த அளவு தண்ணீரில் விவசாயம் செய்யவும் விவசாயிகள் பல புதிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். இதனால் தண்ணீர் தட்டுபாடு உள்ள விவசாயிகள் சொட்டு நீர், சுழல் நீர் பாசன முறையை அதிகளவில் பயன்படுத்துகின்றர். சுழல் நீர் பாசனத்தில் மழை பொழிவதை போன்று தண்ணீர் பாய்ச்சுவதால் மழை தூவான் எனவும் அழைக்கின்றனர். இம்முறையில் கரும்பு, மரவள்ளி, மஞ்சள் பயிர்களுக்கும் இந்த பாசனம் ஏற்றதாக உள்ளது. சுழல் நீர் பாசனத்தில் தண்ணீர் பெருமளவில் மிச்சப்படுத்தப்படுகிறது. விவசாயிகளிடையே சுழல் நீர் பாசன முறை பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

## சின்ன வெங்காயம் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

**தியாகதுருகம்**: குறுகிய காலத்தில் பலன் தரும் சிறிய வெங்காயம் சாகுபடியில் முடியனூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள் ஆர்வமுடன் ஈடுபட்டு லாபம் ஈட்டி வருகின்றனர். பருவமழை கடந்த 2 ஆண்டுகளாக எதிர்பார்த்த அளவு பெய்யாததால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் தியாகதுருகம் பகுதியில் நெல், கரும்பு சாகுபடி பாதித்துள்ளது.

குறைந்த தண்ணீரை கொண்டு பலன் தரும் குறுகிய கால பயிர்களை சாகுபடி செய்வதில் விவசாயிகளின் கவனம் திரும்பியுள்ளது. இதில் காய்கறி பயிரிட்டு பலர் லாபம் ஈட்டி வருகின்றனர். பராமரிப்பு சிரமம் இல்லாத சிறிய வெங்காயம் பயிரிடுவதில் முடியனூர் பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நடவு செய்து 80 நாளில் மகசூல் கொடுக்கிறது. ஐந்த நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. செடிகளில் பூச்சு, நோய் பாதிப்புகள் அதிகம் ஏற்படுவதில்லை. ஒரு ஏக்கருக்கு 5 டன் வரை வெங்காயம் அறுவடை செய்ய முடியும். மார்க்கெட் விலை அதிகம் கிடைப்பதை பொருத்து இரட்டிப்பு லாபம் ஈட்ட முடியும்.

தற்போதய நிலவரப்படி ஒரு கிலோ சிறிய வெங்காயம் 15 ரூபாய் விலைக்கு விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் நேரடியாக கொள்முதல் செய்கின்றனர். சாகுபடி செலவு 25 ஆயிரம் போக ஒரு ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாய் வரை லாபம்

கிடைக்கிறது. இதனால்சிறிய வெங்காயம் சாகுபடி செய்வதில் இப்பகுதி விவசாயிகள் பலர் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ளனர்.

## எள் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

**சங்கராபுரம்**: சங்கராபுரம் பகுதியில் எள் சாகுபடியில் விவசா யிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். சங்கராபுரம் பகுதியில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. இரு ஆண்டுகளாக பருவ மழை பொய்த்த தால் ஏரி, குளங்கள் வறண்டன. இதனால் கிணறுகளில் நீர் மட்டம் வெகுவாக குறைந்தது. குறைந்த அளவு தண்ணீரை கொண்டு எள் சாகுபடியில் மக்கள் அதிக ஆர்வம் கொண்டுள்ளனர். சங்கராபுரம் பகுதியில் நெடுமானுார், அரசம்பட்டு, செமபாளையம், மூலக்காடு, லக்கினாய்கன்பட்டி, குளத்துார், செட்டியந்துார், ஆலத்துாரில் விவசாயிகள் அதிகளவில் எள் சாகுபடி செய்துள்ளனர். இந்த ஆண்டு எள் கூடுதல் விலைக்கு கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந் துள்ளனர்.

## காய்கறி பந்தலுக்கு வேலிகாத்தான் மரங்கள் விவசாயிக்கு வனத்துறையினர் அழைப்பு

**தர்மபுரி**: தர்மபுரி வனகோட்டத்துக்கு உட்பட்ட பென்னாகரம், ஒகேனக்கல், பாலக்கோடு வனசரகத்தில், 150க்கும் மேற்பட்ட யானைகள் உள்ளன. இப்பகுதிகளில், பெய்த கோடை மழையின் காரணமாக வனப்பகுதியில் உள்ள வேலிகாத்தன் மரங்கள் பசுமையாக துளிர்த்ததுடன், அதிகளவில் காய்கள், காய்த்து வருகிறது. கோடைகாலத்தில், பசுமையாக உள்ள வேலிகாத்தான் இலைகள் மற்றும் காய்களை, யானைகள் சாப்பிட்டு இறக்கும் அபாயம் இருந்தது. எனவே, வனப்பகுதியில் உள்ள வேலிகாத்தான் மரங்கள், காய்களை வனத்துறையினர் உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுத்தனர்.

இதுகுறித்து, வனத்துறை அதிகாரிகள் கூறியதாவது: தர்மபுரி மாவட்ட வனப்பகுதியில் உள்ள வேலி காத்தான் செடிகளில் உள்ள இலைகள் மற்றும் காய்களை உண்டதால், கடந்தாண்டு, ஏழு யானைகள் பரிதாபமாக உயிரிழந்தது.

இது, வனத்துறையினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்தாண்டு வேலிகாத்தான் செடிகள் மற்றும் காய்களால், யானைகள் உயிரிழப்பு ஏற்படுவதை தடுக்க, கோடை கால துவக்கத்தில் இருந்தே, தர்மபுரி மாவட்டத்தில், யானைகள் நடமாட்டம் அதிகம் உள்ள ஒகேனக்கல், பென்னாகரம், பாலக்கோடு வனப்பகுதிகளில் உள்ள வேலிகாத்தான் செடிகளில் இருந்து, 2,000 கிலோவுக்கு மேல் வேலிகாத்தான் காய்களை அழித்தோம். ஆனால், இப்பகுதியில், பெய்த கோடை மழையின் காரணமாக, இச்செடி மற்றும் மரங்கள் பசுமையாக வளர்ந்தது. இதனால், வனப்பகுதியில் இருந்து யானைகளின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய வேலிகாத்தான் செடி மற்றும் மரங்களை முற்றில் அழிக்க முடிவு செய்து, சில தினங்களாக வனத்துறையினர், வனப்பகுதியில் உள்ள வேலிகாத்தான் செடி மற்றும் மரங்களை அழித்து வருகிறோம். வனப்பகுதியில் வெட்டப்படும் வேலிகாத்தான் மரங்களை, விவசாயிகள் காய்கறி பந்தல் அமைக்க இலவசமாக வழங்கி வருகின்றனர். இதை, ஒகேனக்கல், பென்னாகரம் உள்ளிட்ட விவசாயிகள், வாடகை வாகனங்கள் மூலம் எடுத்து செல்கின்றனர், என்றனர்.

## 14 கால்நடை மருந்தகங்கள் ரூ.58 லட்சத்தில் பராமரிப்பு

**ஈரோடு:** மாவட்டத்தில் 14 கால்நடை மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகள், 58 லட்சம் ரூபாய் செலவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.தமிழக அரசின் கால்நடை பராமரிப்பு துறை சார்பில், கால்நடை மருத்துவமனைகள், மருந்தகங்கள் இயங்குகின்றன.

பசு, எரு மை, நாய், ஆடு, கோழி, பூனை, குதிரைகள் அதிகளவில் சிகிச்சைக்கு வருகின்றன. ஆடு, பசு, எருமைகளுக்கு கருவூட்டல், சினை பரிசோதனை உள்ளி ட்ட அனைத்து சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகிறது. தமிழ்நாடு மருந்து வா ணிப கழகம் மூலம் மருந்துகள் வினியோகிக்கப்படுகிறது. இம்மாவட்டத்தில் ஈரோடு, கோபி என, இரு கால்நடை கோட்ட அலுவலகங்களும், இரண்டு கால்நடை பெரு மருத்துவமனைகள் உள்ளன. தவிர, ஆறு இடங்களில், ஆறு கால்நடை மருத்துவமனைகள், மூன்று நடமாடும் மருத்துவமனைகள், இரு

இடங்களில் வெ க்கை நோய் தடுப்பு குழுக்கள், 25 ஊரக கால்நடை மருந்தகங்கள், 20 கால்நடை மருத்துவ கிளை நிலையங்கள் உள்ளன.

மாவட்டத்தில் உள்ள, 14 கால்நடை மருந்தகங்கள், மருத்துவமனைகள் பராமரிப்பு மற்றும் பழுதுகளை சரிசெய்ய, அதன் இயக்குனர் உத்தரவிட்டிருந்தார். 2013-14 நிதியாண்டுக்காக, தமிழக பால் வளம் மற்றும் மீன்வளர்ச்சி துறை சார்பில், மொத்தம், 58 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.

இத்தொகை மூலம் இடிந்த கட்டிடங்கள், டைல்ஸ் கற்கள் பதித்தல், வெள்ளையடித்தல், சுற்றுச்சுவர் கட்டுதல் உள்ளிட்ட பணிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

வெள்ளோட்டுக்கு, நான்கு லட்சம், கம்பளியம்பட்டி, இரண்டு லட்சம், ஈரோடு கால்நடை பெருமருத்துவமனைக்கு, ஏழு லட்சம், கொளப்பலூர், கள்ளிப்பட்டி, தாளவாடி, புஞ்சை புளியம்பட்டி, காவிலிபாளையம் ஆகிய மருந்தகங்களுக்கு, தலா, ஏழு லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அம்மாபேட்டை, அந்தியூர், குருமந்தூர், மைலம்பாடி மருந்தகங்களுக்கு, தலா, மூன்று லட்சம் ரூபாயில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்நிதியை கொண்டு, பராமரிப்பு பணிகளை மே ற்கொண்டு, முன்பு இருந்த கட்டிடம், பராமரிப்புக்கு பின் உள்ள கட்டிடத்தின் அமைப்பு குறித்து, ஃபோ ட்டோ எடுத்து, அதனை இணை இயக்குனர் ஒப்புதலுடன், மாவட்டம் வாரிய ாக "சிடி' யாக தயாரித்து, இயக்குனர் பார்வைக்கு, அனு ப்பி வைக்கப்பட உள்ளது.

## பயனாளிகளுக்கு கறவை மாடுகள்

**உடுமலை :** வடுகபாளையம் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் சார்பில், பயனாளிகளுக்கு கறவை மாடுகள் வழங்கப்பட்டன. கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணை தலைவர் சுந்தரசாமி தலைமை வகித்தார். தொடக்க

வேளாண் கூட்டுறவு கடன் சங்க தலைவர் கிருஷ்ணசாமி முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில், 16 பயனாளிகளுக்கு 6 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள கறவை மாடுகள் மற்றும் விவசாய சாகுபடிக்கு, மத்திய கால கடன்கள் வழங்கப்பட்டன. மத்திய கூட்டுறவு வங்கி கள மேலாளர் மணிமாறன், கள மேற்பார்வையாளர் நாசர்அலி, ஊராட்சி தலைவர் சித்ரா உட்பட பலர் பங்கேற்றனர். கூட்டுறவு சங்க செயலாளர் பாண்டியன் நன்றி தெரிவித்தார்.

## பூவன் வாழைத்தார் குறைவு மக்காச்சோளம் அதிக விலை

**வேலாயுதம்பாளையம்**: கரூர் மாவட்டத்தில் வேலாயுதம்பாளையம், நொய்யல், மரவாபாளையம், சேமங் கி, முத்தனூர், நடையனூர், கோம்புப்பாளையம், திருக்காடுதுறை, என்.புகளூர், லாலாப் பேட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் வாழை பயிரிட்டுள்ளது. கரூரில் இருந்து திண்டுக்கல், மதுரை, திருச்சி, கரூர், ஈரோடு, கோவை நாமக் கல், நீலகிரி, சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும், ஆந்திரா, கேரளா, கர்நாடகா, உத்திரபிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் லாரிகள் மூலம் வாழைத்தார்கள் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. கடந்த வாரத்தில் பூவன் வாழைத்தார் 400 ரூபாய்க்கும், பச்சை நாடன் 350 ரூபாய்க்கும் மொந்தன் வாழைத்தார் 600 ரூபாய்க்கும் விற்றது. நேற்று பூவன் வழைத்தார் 300 ரூபாயக்கும், பச்சைநாடன் 300 ரூபாய்க்கும், மொந்தன் 400 ரூபாய்க்கும் விற்றது. ஆனால், ரஸ்தாளி, கற்பூரவள்ளி வாழைத்தார்களின் விலை சற்று அதிகமாக இருந்தது. திருவிழாக்கள் துவங்கியுள்ள நிலையில், பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் பூவன் வாழைத்தாருக்கு விலை குறைந்துள்ளதால், விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

* நொய்யல் மரவாபாளையம், ஓலப்பாளையம், புங்கோடை காளிபாளையம், கொளத்துப்பாளையம் பகுதிகளில் மக்காச்சோளம் நேரடியாகவும், மஞ்சள், கரும்பு பயிர் களில் ஊடுபயிராகவும் பயிரிடப்பட்டுள்ளது. சாலைப்புதூர் அரசு ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு கொண்டு சென்று ஏல முறை மூலம் விற்பனை செய்கின்றனர். மக்காச்சோளம் கோழித் தீவனம் தயாரிக்கவும், மாவு தயாரிக்கவும், விதைக்காகவும், வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். அதிக பயன்பாடு உள்ள

மக்காச்சோளம் கடந்த மாதங்களில் ஒரு டன் ரூபாய் 13,500 ரூபாய்க்கு விற்பனை ஆனது. ஆனால், தற்போது ஒரு டன் 14,500 வரை ஏல மார்க்கெட்டில் மக்காச்சோளம் விற்றது.

## தொடர் மழை

**தாண்டிக்குடி** : தாண்டிக்குடி மற்றும் தடியன்குடிசை நறுமண சுற்றுலா பகுதியில் நேற்று பகல் மழை பெய்தது. காலையில் சுட்டெரிக்கும் வெயில் நீடித்த நிலையில் பகல் 2 மணிக்கு தொடங்கிய மழை விட்டு, விட்டு மாலை 4 மணி வரை பெய்தது. தாண்டிக்குடி, தடியன்குடிசை, காமனூர், மணலூர் மற்றும் அதனைச்சுற்றியுள்ள மலைக்கிராமங்களிலும் மழை நீடித்தது. தாண்டிக்குடியில் நேற்று மாலை 5 மணிவரை 12.மி.மீ., மழை பதியவாகியது. தொடர் மழையால், மலை விவசாயத்திற்கு ஏற்றதாக அமைந்துள்ளது. நேற்று முன்தினம் 20.மி.மீ., மழை பெய்துள்ளது.

## இலவம் விவசாயிகள் மகிழ்ச்சி

**வருஷநாடு** : வருஷநாடு,வாலிப்பாறை, தும்மக்குண்டு பகுதிகளில் இலவம் பஞ்சு விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

வருஷநாடு,வாலிப்பாறை, தும்மக்குண்டு, காந்திக்கிராமம், சிங்கராஜபுரம், வாய்க்கால்பாறை, கோம்பைத்தொழு, கோரையூத்து, முருக்கோடை, காமராஜபுரம், உப்புத்துறை, தங்கம்மாள்புரம், கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை ஆகிய பகுதிகளில் பத்தாயிரம் ஏக்கரில் இலவம் பஞ்சு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு போதிய மழை இல்லாததால், இலவ பஞ்சு உற்பத்தி குறைவாக இருந்தது. மார்ச், ஏப்ரல் மாதத்தில் கிலோ ரூ.45க்கு விற்கப்பட்டது. தற்போது, ரூ.58 முதல் 60 வரை விலை கிடைப்பதால், இலவம் பஞ்சு விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கோடை உழவு துவக்கம்

**கமுதி :** கமுதி பகுதியில் கோடை மழை கை கொடுப்பால் விவசாயிகள், உழவு பணியில் ஆர்வம் செலுத்தியுள்ளனர். சில வாரங்களுக்கு முன், கமுதி பகுதியில் கோடை மழை பெய்தது. இதன், காரணமாக கண்மாய், ஊரணிகள் மற்றும் குட்டைகளில் ஓரளவிற்கு நீர் நிரம்பி காணப்படுகிறது.

கமுதி பகுதியில் பசும்பொன், சம்பகுளம், பேரையூர் உட்பட பல பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள் கோடை உழவு மற்றும் விவசாய பணிகளை துவக்கியுள்ளனர். இதில், ஒரு சில விவசாயிகள் நெல் அதிகளவிலும், சில இடங்களில் கடலை, சோளம், கேப்பை, மிளகாய், வெங்காயம் உள்ளிட்ட பயிர் வகைகளையும் பயிரிட்டுள்ளனர். கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை பொய்ப்பால் கவலையடைந்திருந்த விவசாயிகள் கோடை மழை கை கொடுப்பால் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## தூத்துக்குடியில் முதலாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது

**தூத்துக்குடி :** தூத்துக்குடி துறைமுகத்தில் புயல் சின்னம் காரணமாக முதலாம் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. வங்க கடலில் அந்தமான் நிக்கோபார் தீவு பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இது புயல் சின்னமாக மாற வாய்ப்புள்ளது.வானிலை ஆய்வு மையம் வங்க கடலோர பகுதியில் புயல் எச்சரிக்கைகூண்டு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, இதன்படி காரைக்கால், நாகப்பட்டிணம்,பாம்பன் ஆகிய பகுதிகளில் முதலாம் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. புயல் சின்னம் காரணமாக தூத்துக்குடியில் இது வரை பெரிய பாதிப்புகள் ஏதும் இதுவரை ஏற்படட்டதில்லை.நேற்று மாலை 5 மணிக்கு தூத்துக்குடி துறைமுகத்தில் முதலாம் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### ரூ.60 ஆயிரத்துக்கு பசு மாடுகள் விற்பனை பொய்கை மாட்டுச்சந்தையில்

**வேலூர்**, :வேலூர் அடுத்த பொய்கை மாட்டுச்சந்தை வழக்கம் போல் நேற்று காலை 6 மணிக்கு கூடியது. இங்கு வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி, காஞ்சிபுரம், ஒசூர் உள்ளிட்ட சுற்றுவட்டார மாவட்டங்கள் மட்டுமின்றி ஆந்திரம், கர்நாடகம் உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டன.

இதில் பசுமாடு ரூ.12 ஆயிரம் முதல் ரூ. 60 ஆயிரம் வரையிலும், எருது மாடுகள் ரூ.15 ஆயிரம் முதல் ரூ.55 ஆயிரம் வரையிலும், எருமை மாடுகள் ரூ.30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரையிலும் விற்பனை செய்யப்பட்டது.

வழக்கம் போல நேற்று சந்தையில் விற்பனை மந்தமாகவே இருந்தது.

### நீடாமங்கலத்தில் உணவு காளான் உற்பத்தி தொழில் நுட்ப பயிற்சி

**நீடாமங்கலம்,** : திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உணவு காளான் உற்பத்தி தொடர்பான தொழில் நுட்ப பயிற்சி நடந்தது.

பயிற்சியை வேளாண்மை விரிவாக்கத்துறை இணைப் பேராசிரியர் முனைவர் தாமோதரன் தொடங்கி வைத்தார்.

அவர் பேசுகையில், குறைந்த இடுபொருட்களைக் கொண்டு குறுகிய காலத்தில் நிறை வான வருமானம் பெற காளான் வளர்ப்பு சிறந்த தொழிலாகும்.

காளானை வளர்த்து உடனே விற்பனை செய்யும்போது நிகர லாபம் குறைவாகவே இருக்கும். அதே சமயத்தில் காளானை மதிப்பூட்டப்பட்ட சூப்பு, பஜ்ஜி, மஞ்சூரி,

சில்லி போன்ற உணவு பொருள்களாக விற்பனை செய்யும்போது ஒரு கிலோ காளானில் ஆயிரம் ரூபாய் வரை வருமானம் பெறலாம் என்றார். மேலும் காளான் வகைகள், அதன் மருத்துவ குணங்கள், வளர்ப்புமுறை, தொற்றுநீக்குதல் அவசியம், காளான் படுக்கை, விற்பனை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

திட்ட உதவியாளர் ரேகா, காளானில் இருந்து மதிப்பூட்டப்பட்ட உணவு பொருள்கள் பற்றி செயல்முறை விளக்கம் அளித்தார்.

வேளுக்குடி இளங்கோவன் மற்றும் திருவாரூர், சென்னை, திருவண்ணாமலை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, நாகை மாவட்டங்களை சேர்ந்த 60க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

## <u>நாகையில் 30ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>

**நாகை,** : நாகையில் 30ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடக்கிறது. நாகை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ள முதன்மை கூட்டரங்கில் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வருகிற 30ம் தேதி காலை 11 மணி அளவில் நடைபெற உள்ளது.

கூட்டத்திற்கு கலெக்டர் முனுசாமி தலைமை வகிக்கிறார். கூட்டத்தில் டிஆர்ஓ ஆசியா மரியம், மாவட்ட வேளாண் இணை இயக்குனர் ரவீந்திரன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர்.

எனவே மாவட்ட விவசாயிகள், விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களுடைய கருத்துக்களை தெரிவித்து பயன்பெறும்படி கலெக்டர் முனுசாமி தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கடலூர் துறைமுகத்தில் 1–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது</u>**



**கடலூர் முதுநகர்,**

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுமண்டலம் உருவாகி இருப்பதை அடுத்து கடலூர் துறைமுகத்தில் 1–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது.

கோடை வெயில்

கடலூரில் இந்த ஆண்டும் கோடை வெயில் பொதுமக்களை வாட்டி வதைத்து வருகிறது. அக்னி நட்சத்திரம் தொடங்கிய நாளில் வெப்பச்சலனம் காரணமாகவும், வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாகவும் சில நாட்களுக்கு பலத்த மழை பெய்தது. இதனால் வெப்பம் தணிந்து பூமி குளிர்ந்தது. பின்னர் மீண்டும் வெயில் அடிக்க தொடங்கியது.

வழக்கம்போல நேற்றும் காலையில் இருந்து மாலை வரையில் வெயில் சுட்டெரித்தது. சாலைகளில் அனல் பறந்தது. பாதசாரிகள் சிலர் கையில் குடை

பிடித்து கொண்டும், துணியால் தலையை போர்த்தியபடியும் நடந்து சென்றதை பார்க்க முடிந்தது. இதனால் இளநீர், பதனீர், மோர், கரும்புசாறு, குளிர்பானங்கள் ஆகியவற்றை பருகி பொதுமக்கள் தாகத்தை தணித்துக் கொண்டனர்.

புயல் எச்சரிக்கை கூண்டு

மீண்டும் கோடை மழை பெய்து பூமியை குளிர்வித்தால் தான் வெப்பத்தின் தாக்கம் குறையும் என்ற நிலையில் வங்கக்கடலில் அந்தமான் அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வுமண்டலம் உருவாகி இருக்கிறது. இது மேலும் வலுவடைந்து தீவிர காற்றழுத்த தாழ்வுமண்டலம் மாறி அடுத்த 48 மணி நேரத்தில் வங்க தேசம் அருகே கரையை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் தமிழ்நாட்டுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்றாலும் கடலூர் துறைமுகத்தில் 1–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

490 கிலோ மீட்டர்

இது குறித்து துறைமுக அதிகாரி ஒருவர் கூறுகையில், அந்தமானுக்கு வடக்கு, வடமேற்கு திசையில் 490 கிலோ மீட்டர் தொலைவில் குறைந்த காற்றழுத்த தாழ்வுமண்டலம் உருவாகியுள்ளது. இந்த குறைந்த காற்றழுத்த தாழ்வுமண்டலமானது, தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி வடக்கு, வடகிழக்கு திசையில் நகர்ந்து மியான்மர், வங்காளதேசம் நாடுகள் நோக்கி செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. வங்கக்கடலை இந்திய வானிலை ஆய்வு மையம் 6 பிரிவுகளாக பிரித்துள்ளது. அவையாவன, வடமேற்கு, வடகிழக்கு, மேற்கு மத்தியம், கிழக்கு மத்தியம், தென்மேற்கு, தென்கிழக்கு, அந்தமான் கடல் என 6 பிரிவுகளாக பிரித்துள்ளனர். இதில் எந்த பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவானாலும் அதனை அறிவிக்கும் வகையில் இந்தியாவின் கிழக்கு கடற்கரையோர பகுதிகளில் உள்ள துறைமுகங்களில் 1–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்படுவது வழக்கம். மேலும் இது இவ்வழியாக செல்லும் கப்பல்களுக்கு முன்எச்சரிக்கையாக இருக்கும் என்றார்.